1972 மார்ச் 22]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தப் புதுக்கோட்டை கிராமத்திற்குப் பல ஆண்டுகாலமாக சுடுகாட்டிற்கு பாதை வசதியில்லாமல் இருக்கிறது. இறந்தவர்கள் மீண்டும் வந்து போராட்டம் நடத்தப் போவதில்லை. இருப்பவர்கள் கேட்டுக் கேட்டு அசந்து விட்டார்கள். ஆகவே, எவ்வளவு விரைவில் அதை முடித்துத் தரமுடியுமோ அவ்வளவு விரைவில் பாதை அமைத்துத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்த அவசியத்தை உணர்ந்து தான் நில ஆர்ஜிதம் முடிந்து விட்டது, பிறகு அந்தப் பாதை அமைப்பதற்கான வகையில் அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்று கூறினேன்.

தஞ்சை மாவட்டத்திலிருந்து அரிசி எடுத்துச் செல்லக் கட்டுப்பாடு

*629 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு–வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்திலிருந்து பிற மாவட்டங்களுக்குச் சொந்த உபயோகத்திற்காக அரிசி எடுத்துச் செல்ல இருந்து வரும் கட்டுப் பாட்டை நீக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை. ஆனால் தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நெல்–அரிசிப் போக்குவரத்துக் கட்டுப்பாடு ஆணையின் கீழ் ஒருவர் 10 கிலோகிராம் வரை நெல்லையோ அல்லது அரிசியையோ எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி, எடுத்துச் செல்ல வழி வகை உள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, யார் பெயருக்கு நிலத்தின் பட்டா இருக்கிறதோ அவர்களுக்கு மட்டும் சொந்த நிலத்திலிருந்து சொந்த உபயோகத்திற்கு அரிசி எடுத்துச் செல்ல பர்மிட் கொடுக்கப்படுகிறது. சொந்த நிலமுள்ள ஒரு குடும்பத்தில் உள்ள யாருக்கும் அந்த பர்மிட் வழங்க வேண்டுமென்று அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, யார் பேரில் பட்டா இருந்தாலும், அவர் நிலத்திற்கு உரியவர்கள் என்று இருக்கும் பட்சத்தில் தாசில்தாருக்கு விண்ணப்பித்தால் அவர்கள்

அதை விசாரித்து, உரியவர்கள் தான் என்று தெரிந்தால் அவர்கள் சொந்தக்காரர்களுக்கோ, அல்லது அவர்களுக்கு உரியவர்களுக்கோ நெல்லையோ, அரிசியையோ எடுத்துக் கொண்டு செல்வதற்கு முடியும். அங்கேயிருக்கும், தாசில்தார், டி.எஸ்.ஓ. இதற்கான அனுமதியை வழங்குகிறார்கள்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, நிலச் சொந்தக்காரர்களின் மகன், மகளுக்கு உறவினர்களுக்குத்தான் இந்த மாதிரி அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால் நண்பர்கள் இருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில் சென்னையில் சில நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அரிசி கேட்கிறார்கள். ஆனால் நான் அரிசி வியாபாரி அல்ல. நான் நிலம் வைத்து இருப்பவன். நான் அனுப்ப வேண்டுமானால் எப்படி அனுப்புவது? அனுப்ப முடியாமல் இருக்கிறது. இதற்கு என்ன வழி என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தஞ்சையில் நிலம் இருப்பதாகத் தெரியவில்லை. அவர் அரிசி வியாபாரி என்பது மட்டும் எனக்குத் தெரியும். (சிரிப்பு).

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இப்போது உணவு தான்யம் தாராளமாக இருக்கிற காரணத்தால் இந்தக் கட்டுப்பாடு விதிமுறைகளை மாற்றியமைப்பதற்கு ஏதேனும் உத்தேசம் அரசாங்கத்திடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நான் துவக்கத்திலேயே சொன்னேன், இல்லை யென்று தெரிவித்தேன். உணவு தான்யங்கள் அதிகமாக விளைந்திருக்கிறது என்ற காரணத்தால் கட்டுப்பாட்டை நீக்கி விட்டால், ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் போய், வெளிமாநிலங்களுக்குப் போய் விடக்கூடிய நிலைமையேற்படும். அரசாங்கத்திற்கு நெல் கையிருப்புத் தேவை யென்ற காரணத்தால் இந்தக் கட்டுப்பாட்டை வைத்திருக்கிறோம்.